1972 டிசம்பர் 15]

மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனர் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு ஒருவேளை தெரியாது என்று கருதுகிறேன். இப்போது தனியாக போலீஸ் இலாகாவில் ஒரு பிரிவு கூட்டுறவுத் துறைக்கென்றே ஒதுக்கப்பட்டு, கூட்டுறவுத்துறையில் நடக்கின்ற கிரிமினல் குற்றங்களைப் புலனய்வு செய்து கொண்டு வருகிருர்கள். இப்படிப்பட்ட குற்றங்கள் நிகழ்ந்திருக்குமானல், அந்த இலாகாவிற்குத் தெரியாமல் இருக்குமானல் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால், நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : தலைவரவர்களே, ராஜபாளையம் நகர கூட்டுறவுப் பண்டக சாலையில் லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் என்று அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். அதற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனர்: தலைவரவர்களே, நான் லட்சக் கணக்காக என்று சொல்லவில்லை. இங்கே நஷ்டம் 2,66 ஆயிரம்தான் வைத்திருக்கப்பட்ட பட்டியல் கிரிமினல் குற்றம் செய்தவர்கள் மீது புல னய்வு செய்கிற பட்டியல். ஏறத்தாழ 350 வழக்குகள் புலனய்வு செய்யப் பட்டு கோர்ட்டுகளில் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனல், சிவில், அதாவது பணம் வருவாய், அதைப் பற்றுதல் செய்வதற்கென்று தனியாக சர்சார்ஜ் என்று நியமித்து அதற்கு வேண்டிய முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. அதன்படி சர்சார்ஜ் செய்வதற்கு வேண்டிய செயற் குறிப்பு இருக்கிறது.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : விஞக்கள் 127, 128 ஒத்தி வைக்கப்படுகின்றன.

Thondi Port.

*129 *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR ; Will the Hon. Minister for Co-operation be pleased to state whether there is any proposal with the Government to expand the Thondi Port?

தொண்டித் துறைமுகம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

தொண்டித் துறைமுகத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இல்லை.